**12TH STD** காலாண்டுத்தேர்வு மாதிரிவினாத்தாள் --- 1 ( 2019 )

## கணக்குப்பதிவியல்

நேரம் : 2.30 மணி | மதிப்பெண் : 90

### பகுதி --- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். $20 \times 1 = 20$

1. தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது
   அ) தொடக்க முதல் கண்டறிய ஆ) இறுதி முதல் கண்டறிய
   இ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய ஈ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய

2. உரிமையாளரின் சொத்துகள் ₹. 85,000 மற்றும் பொறுப்புகள் ₹. 21,000 எனில் அவருடைய முதல் தொகை ----------
   அ) ₹. 85,000 ஆ) ₹. 1,06,000 இ) ₹. 21,000 ஈ) ₹. 64,000

3. பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை?
   அ) பழைய செய்தித்தாள்கள் விற்றது ஆ) சொத்து விற்பனை மீதான நட்டம்
   இ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம் ஈ) அறைகலன் விற்ற தொகை

4. நடப்பாண்டில் பெறவேண்டிய சந்தா இன்னும் பெறாதது ------------
   அ) ஒரு சொத்து ஆ) ஒரு பொறுப்பு
   இ) ஒரு செலவு ஈ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று

5. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
   அ) எடுப்புகள்மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   ஆ) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
   இ) கடன்மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   ஈ) இலாபப்பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்

6. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
   அ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து ஆ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
   இ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து ஈ) நற்பெயரினை வாங்க முடியாது

7. சராசரி இலாபம் ₹. 32,000 மற்றும் சாதாரண இலாபம் ₹. 7,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்
   அ) ₹. 25,000 ஆ) ₹. 5,000 இ) ₹. 10,000 ஈ) ₹. 15,000

8. ராஜி மற்றும் கமலேஷ் கூட்டாளிகள் இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். அவர்கள் யோகேஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். ராஜி, கமலேஷ் மற்றும் யோகேஷின் புதிய இலாப் பகிர்வு விகிதம் 3:1:1. ராஜி மற்றும் கமலேஷின் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.
   அ) 1:3 ஆ) 3:1 இ) 2:1 ஈ) 1:2

9. கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல?
   அ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறும்
   ஆ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்
   இ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கப்படும்
   ஈ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது



10. A, B மற்றும் C என்றகூட்டாளிகள் 2:2:1 என்றவிகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். B- ன் விலகலின் போது நிறுவனத்தின் நற்பெயர் ₹. 30,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளி B-க்கு ஈடு செய்வதற்கு A மற்றும் C யின் பங்களிப்பைக் கண்டறியவும்.
    அ) ₹. 20,000 மற்றும் ₹. 10,000 ஆ) ₹. 8,000 மற்றும் ₹. 4,000
    இ) ₹. 10,000 மற்றும் ₹. 20,000 ஈ) ₹. 15,000 மற்றும் ₹. 15,000

11. மறுமதிப்பீட்டின்போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது -------------
    அ) ஆதாயம் ஆ) நட்டம் இ) இலாபம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

12. முன்னுரிமைப்பங்கு என்பது -----------
    (i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் செலுத்துவதற்கான முன்னுரிமையைப்பெற்றபங்கு
    (ii) கலைப்பின்போது பங்கு முதலை திரும்பப் பெறுவதற்கான முன்னுரிமையைப்பெற்ற பங்கு
    அ) (i) மட்டும் சரியானது ஆ) (ii) மட்டும் சரியானது
    இ) (i) மற்றும் (ii) சரியானது ஈ) (i) மற்றும் (ii) தவறானவை

13. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்
    (A) குறைஒப்பம் - (i) முன்கூட்டிச் செலுத்திய அழைப்பு பணம்
    (B) மிகைஒப்பம் - (ii) வெளியிட்ட பங்குகளைவிடஅதிகமாகஒப்பப்பட்டது
    (C) அழைப்பு நிலுவை - (iii) வெளியிட்ட பங்குகளைவிடகுறைவாகஒப்பப்பட்டது
    (D) அழைப்பு முன்பணம் - (iv) செலுத்தப்பெறாத அழைப்பு பணம்

| | (A) | (B) | (C) | (D) |
|---|---|---|---|---|
| அ | (i) | (ii) | (iii) | (iv) |
| ஆ | (iv) | (iii) | (ii) | (i) |
| இ | (iii) | (ii) | (iv) | (i) |
| ஈ | (iii) | (iv) | (i) | (ii) |

14. ₹. 8 செலுத்தப்பட்ட, ₹. 10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டது எனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை -------------
    அ) பங்கொன்று ₹. 10 ஆ) பங்கொன்று ₹. 8
    இ) பங்கொன்று ₹. 5 ஈ) பங்கொன்று ₹. 2

15. மறுமதிபீட்டுக் கணக்கு ஒரு ---------
    அ) சொத்து க/கு ஆ) பெயரளவு க/கு இ) ஆள்சார் க/கு ஈ) ஆள்சாரா க/கு

16. கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின் போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது.
    அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஆ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்
    இ) ஆதாய விகிதம் ஈ) தியாக விகிதம்

17. ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாப விகிதமாக கருதப்படுவது
    அ) சராசரி இலாபம் ஆ) சாதாரண இலாபவிகிதம்
    இ) எதிர்நோக்கும் இலாபவிகிதம் ஈ) இவைகளில் ஏதுமில்லை

18. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
    அ) சம்பளம் ஆ) கழிவு இ) கடன்மீது வட்டி ஈ) முதல் மீது வட்டி

19. கீழ் வருவனவற்றில் எது சரியானது?

அ) உயர் இலாபம் = மொத்தஇலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

ஆ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

இ) உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்

ஈ) உயர் இலாபம் = சராசரி இலாபம் x கொள்முதல் ஆண்டுகள்

20. ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத நடுவிலும் ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரியாக

அ) 5.5 மாதங்கள் ஆ) 6 மாதங்கள் இ) 12 மாதங்கள் ஈ) 6.5 மாதங்கள்

## பகுதி --- II

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 2 = 14$

21. இரட்டைப் பதிவுமுறை பின்பற்றாத போது சிறிய அளவிலான தனிவணிகர் பொதுவாக பராமரித்து வரும் கணக்குகளைத் தருக.
22. இலாப நோக்கற்ற அமைப்பின் முதலின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.
23. இலாபநட்டப் பகிர்வு கணக்கு ஏன் தயாரிக்கப்பட வேண்டும்?
24. ஆதாய விகிதம் என்றால் என்ன?
25. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?
26. கீழ்கண்ட விவரங்களைக்கொண்டு 2018 - 2019 ஆம் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| 1.4.2018 அன்று முதல் | 1,6000 | 31.3.2019 அன்று முதல் | 1,80,000 |
| நிதியாண்டில் எடுப்பு | 36,000 | நிதியாண்டில் கூடுதல் முதல் | 10,000 |

27. பின்வரும் விவரங்களிலிருந்து 2016, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக்கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினை கணக்கிடவும்.

| விவரம் | ₹ |
|---|---|
| 2014 - 2015 - க்காக | 6,000 |
| 2015 - 2016 - க்காக | 44,000 |
| 2016 - 2017 - க்காக | 800 |

i) 2015-16 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா ₹. 1,200

28. பரசுராமன் என்ற கூட்டாளி ஒவ்வொரு மாத இறுதியிலும் ₹. 2,000 எடுத்துக் கொண்டார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 5% அனுமதிக்க வேண்டும். 2018, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய எடுப்புகள்மீது வட்டி கணக்கிடவும்.

29. நிறுவனத்தின் நற்பெயர் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தின் இரண்டு ஆண்டு கொள்முதல் என மதிப்பிடப்படுகிறது.

மூன்று ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹. 9,000 ; ₹. 4,000 ; ₹. 2,000. நற்பெயரின் மதிப்பைக் காண்க



30. நிவேதா மற்றும் பிரியா என்ற இரு கூட்டாளிகள் 3:2 என்ற இலாப விகிதத்தில் இலாபத்தைப் பகிர்ந்து வந்தனர். கோமளா என்பவரை கூட்டாளியாகச் சேர்த்தனர். நிவேதா, பிரியா மற்றும் கோமளா அவர்களின் புதிய இலாபப் பங்கு 5:3:2. தியாகவிகிதத்தைக் கணக்கிடவும்

## பகுதி - III

எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். $7 \times 3 = 21$

31. முன்னுரிமைப் பங்குகளுக்கும், நேர்மைப் பங்குகளுக்கும் உள்ள வேறுபாடுகளில் மூன்றை கூறவும்.
32. கூட்டாளி விலகலின்போது செய்யப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை பட்டியலிடவும்.
33. பின்வருவனவற்றுள் மறுமதிப்பீட்டு கணக்கில் பற்று அல்லது வரவு வைக்கப்படுவதைத் தரவும்.

(அ) சொத்தின் மீதான தேய்மானம் (ஆ) பதிவுறா பொறுப்புகள்

(இ) சொத்தின் மீதான மதிப்பேற்றம்

34. ஒரு நிறுவனத்தின் ஆண்டுதோறும் எதிர்பார்க்கும் சராசரி இலாபம் ₹. 30,000. தொழிலில் பயன்படுத்தப்பட்டுள்ள சராசரி முதல் ₹. 1,00,000. சாதாரண இலாபவிகிதம் 10 %. உயர் இலாபத்தின் இரண்டு ஆண்டு கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.

35. நளினி மற்றும் திவ்யா இருவரும் கூட்டாளிகள். அவர்கள் 4:3 என்ற விகிதத்தில் இலாப மற்றும் நட்டம் பகிர்ந்து வந்தனர். அமீரா 3/8 பங்கு விகிதத்தில் புதிய கூட்டாளியாக சேர்கிறார். அப்போது ₹. 14,000 தமது நற்பெயர் பங்களிப்பாக கொண்டு வருகிறார். அவர்கள் மாறுபடும் முதல் முறையில் கணக்கினை பராமரிக்கின்றனர். நற்பெயருக்கென தொகை முழுவதையும் அவர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். நற்பெயரைச் சரிகட்டத் தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை உருவாக்கவும்.

36. சதீஷ் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ₹. 12,000 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 5 % விதிக்கப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி காலமுறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

1) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்
2) ஒவ்வொரு மாத நடுவில் எடுத்திருந்தால்

37. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரகிருப்பு | 44,000 | சம்பளம் கொடுத்தது | 75,000 |
| அறக்கட்டளை நிதி | 56,000 | நுழைவுக்கட்டணம் பெற்றது | 15,000 |
| தொலைப்பேசி கட்டணம் | 10,000 | பொதுச் செலவுகள் | 12,000 |

38. கீழ்கண்ட விவரங்களிலிருந்து விடுபட்ட தொகையினையும், சராசரி இலாபத்தினையும் காண்க.

**சரிக்கட்டப்பட்ட இலாபங்கள்**

| விவரம் | 2016 ₹ | 2017 ₹ | 2018 ₹ |
|---|---|---|---|
| இலாபம் | 27,000 | 39,000 | 41,000 |
| கழிக்க: திரும்ப திரும்ப நிகழா வருமானம் | ----- | | |
| | 19,000 | 39,000 | 41,000 |
| கழிக்க: இறுதிச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டது | | ---- | |
| | 19,000 | 30,000 | 41,000 |
| கூட்டுக : தொடக்கச் சரக்கிருப்பு அதிகமாக மதிப்பிடப்பட்டது | | | 9,000 |
| சரிகட்டப்பட்ட பின் இலாபம் | 19,000 | 30,000 | ---- |

39. பின்வரும் விவரங்களிலிருந்து, பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுக் கணக்கினைத் தயாரித்து கடனாளிகளிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டினைக் கணக்கிடவும்.

| விவரம் | தொகை (₹) |
|---|---|
| தொடக்க பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 50,000 |
| இறுதி பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 75,000 |
| மாற்றுச்சீட்டிற்கான ரொக்கம் பெற்றது | 25,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்டது | 4,000 |

40. பின்வரும் விவரங்கள் ஒரு சங்கத்தின் 2018 - 2019 ஆம் ஆண்டுக்குரிய இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

| விவரம் | ₹ |
|---|---|
| 01.4.2017 அன்று பரிசு நிதிக்கான முதலீடு | 70,000 |
| 01.4.2017 அன்று பரிசு நிதி | 90,000 |
| பரிசு நிதிக்காக நன்கொடை பெற்றது | 4,000 |
| பரிசுகள் வழங்கியது | 2,500 |

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. திரு.ரவி என்பவர் தன்னுடைய ஏடுகளை இரட்டைப்பதிவு முறையில் பராமரிப்பதில்லை. கீழ்காணும் விவரங்களைக் கொண்டு 2019 மார்ச் 31-ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க.

| விவரங்கள் | 31-03-2018 ₹. | 31-03-2019 ₹. |
|---|---|---|
| அறைகலன் | 5,000 | 5,000 |
| பற்பல கடனாளிகள் | 1,25,000 | 1,75,000 |
| ரொக்கம் | 12,500 | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | 87,500 |
| சரக்கிருப்பு | 50,000 | 25,000 |



**கூடுதல் தகவல்கள் :**

| | | | |
|---|---|---|---|
| எடுப்புகள் | ₹. 20,000 | ரொக்க விற்பனை | ₹.2,500 |
| பெற்ற தள்ளுபடி | ₹. 7,500 | விற்பனைத் திருப்பம் | ₹.7,500 |
| அளித்த தள்ளுபடி | ₹. 5,000 | கொள்முதல்திருப்பம் | ₹.2,500 |
| பல்வகைச்செலவுகள் | ₹. 17,500 | கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | ₹.2,67,500 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | ₹. 2,25,000 | | |

(அல்லது)

கவிதா, குமுதா மற்றும் லலிதா ஆகிய கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை முறையே 5:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2018, டிசம்பர் 31 அன்று குமுதா நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் விலகும் நாளில் அவருடைய முதல் கணக்கு ₹. 2,00,000 வரவு இருப்பினைக் காட்டியது.

1) அவருடைய தொகை காசோலை மூலம் உடனடியாகச் செலுத்தப்பட்டால்
2) அவருடைய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லையெனில்
3) ₹. 70,000 உடனடியாக காசோலை மூலம் செலுத்தப்பட்டது

என்ற சூழ்நிலைகளுக்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

42. திரு. ராஜ் அவர்கள் தனது கணக்கேடுகளை முறையாக வைத்திருக்கவில்லை. 31.03.2018 அன்றும் 31.03.2019 அன்றும் அவரது சொத்துக்களும், பொறுப்புகளும் கீழ்கண்டவாறு இருந்தன.

| விவரம் | 31.03.2018 ₹ | 31.03.2019 ₹ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 35,000 | 65,000 |
| ரொக்க இருப்பு | 10,000 | 15,000 |
| பற்பல கடனீந்தோர் | 50,000 | 60,000 |
| பற்பல கடனாளிகள் | 80,000 | 95,000 |
| அறைகலன் | 5,000 | 5,000 |
| முதலீடுகள் | 20,000 | 20,000 |

அவர் அந்த ஆண்டில் ₹. 20,000 கூடுதல் முதல் இட்டார். சொந்த செலவுகளுக்காக மாதந்தோறும் ₹. 1,000 திரும்ப எடுத்துக் கொண்டார். 2018 - 2019 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் நட்டம் கண்டறிக.

( அல்லது )

R,S,T என்ற கூட்டாளிகள் முறையே 5 : 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் நட்டம் பகிர்ந்து வந்தனர். 31-12-2018 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 20,000 | வங்கி ரொக்கம் | 50,000 |
| தொழிலாளர் ஈட்டு நிதி | 30,000 | பற்பல கடனாளிகள் | 30,000 |
| முதல் கணக்குகள் | | சரக்கிருப்பு | 20,000 |
| | | கட்டடம் | 90,000 |
| R 1,00,000 | | இயந்திரம் | 60,000 |
| S 80,000 | | இலாப நட்ட க/கு ( நட்டம் ) | 20,000 |
| T 40,000 | 2,20,000 | | |
| | 2,70,000 | | 2,70,000 |

" T " 2018, ஜனவரி 1 அன்று பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு கூட்டாண்மையிலிருந்து விலகினார்.

1) கட்டடத்தின் மீது 10% மதிப்பேற்றம் செய்யப்பட்டது.
2) சரக்கிருப்பு மதிப்பு 5% குறைக்கவேண்டும்.
3) ₹. 1,000 வாராக்கடன் ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
4) பதிவுறா பொறுப்பு ₹. 8,000 என கண்டறியப்பட்டது.
5) விலகும் கூட்டாளிக்குரிய தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது.

மறுமதிப்பீட்டுக்கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்கு ஆகியவற்றைத் தயாரிக்கவும்

43. அருண் என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. கூட்டாண்மை ஒப்பாவணத்தின்படி எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 12 % விதிக்க வேண்டும். டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் 2018 ஆம் ஆண்டில் அவருடைய எடுப்புகள் பின்வருமாறு:

| நாள் | ₹ |
|---|---|
| பிப்ரவரி | 20,000 |
| மே | 18,000 |
| அக்டோபர் | 34,000 |
| டிசம்பர் | 25,000 |

நேரடி மற்றும் பெருக்குத்தொகை முறையில் எடுப்புகள் மீதான வட்டியைக் கணக்கிடவும்.

( அல்லது )

கோபு, பாபு என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31-03-2019 ஆ நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ₹. | சொத்துகள் | ₹. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 30,000 | வங்கி | 30,000 |
| முதல் கணக்குகள் | | பற்பல கடனாளிகள் | 20,000 |
| கோபு 40,000 | | சரக்கிருப்பு | 10,000 |
| பாபு 30,000 | 70,000 | இயந்திரம் | 30,000 |
| | | அறைகலன் | 10,000 |
| | 1,00,000 | | 1,00,000 |

01-04-2019 அன்று ரவி என்பவரை பின்வரும் பகிர்வுகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர்.

i) ரவி ₹. 10,000 முதல் கொண்டுவருவது.
ii) இயந்திரம் ₹. 24,000 என மதிப்பிடப்பட்டது
iii) அறைகலன் மதிப்பில் ₹. 3,000 குறைப்பது
iv) வாராஐயக்கடன் ஒதுக்கை ₹. 2,000 என அதிகரிப்பது
v) ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள கணக்குகளின் மூலம் பெறவேண்டியவைகள் மதிப்பு ₹. 1,000 பதிவு செய்தல்

மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள் ஆகியவற்றைத் தயாரிக்கவும்



44. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு ரவி, ராஜா எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும், நடப்புக் கணக்குகளையும் தயார் செய்க.

| | ரவி ₹. | ராஜா ₹. |
|---|---|---|
| 1-04-2018 அன்றைய முதல் | 80,000 | 40,000 |
| 1-04-2018 அன்றைய நடப்புக் கணக்கு (வ) | 15,000 | 12,000 |
| அவ்வாண்டில் கொண்டு வந்த கூடுதல் முதல் | 4,000 | 8,000 |
| அவ்வாண்டின் எடுப்புகள் | 15,000 | 10,000 |
| முதல் மீது வட்டி | 9,500 | 6,200 |
| எடுப்பு மீது வட்டி | 200 | 350 |
| அவ்வாண்டின் இலாபப் பங்கு | 12,000 | 10,000 |
| கழிவு பெற்றது | 1,200 | 1,000 |
| சம்பளம் | 6,000 | -- |

( அல்லது )

விஜி மற்றும் தமிழ் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 4:3 என்ற விகிதத்தில் இலாபம் மற்றும் நட்டங்களைப் பகிர்ந்து வருகின்றனர். 2018 ஏப்ரல் 1 அன்று செல்வி என்பவரை கூட்டாளியாகச் சேர்த்துக் கொண்டனர். செல்வி கூட்டாண்மையில் சேர்ந்த அன்று நிறுவன ஏடு நற்பெயர் மதிப்பினை ₹. 42,000 என்று காட்டியது. மாறுபடும் முதல் முறையில் பராமரிக்கப்படுவதாக கருதி தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். கூட்டாளிகள் பின்வரும் முடிவினை எடுத்தனர்.

i) ஏட்டில் உள்ள நற்பெயர் தொகை முழுவதையும் போக்கெழுதுவது
ii) ஏட்டில் உள்ள நற்பெயரில் ₹. 14,000 மட்டும் போக்கெழுதுவது

45. பின்வரும் விவரங்களைக் கொண்டு,
(அ) ஆண்டுத்தொகை முறை மற்றும்
(ஆ) உயர்இலாபத்தினை மூலதனமாக்கல் முறையிலும் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

i) பயன்படுத்தப்பட்டமுதல் ₹. 50,000
ii) சாதாரண இலாபவிகிதம்: 10%
iii) 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹.13,000, ₹.15,000 மற்றும் ₹.17,000.
iv) 3 ஆண்டுகளில் 10% வட்டி வீதத்தில் ₹. 1 ன் தற்போதைய ஆண்டுத்தொகைமதிப்பு ₹. 2.4868.

( அல்லது )

ரம்யா, சாரா மற்றும் தாரா என்ற கூட்டாளிகள் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். 2018, ஏப்ரல் 1 அன்று தாரா கூட்டாண்மையிலிருந்து விலகினார். பின்வரும் சரிக்கட்டுதல்கள் மேற்கொள்ளப்படவேண்டும்.

i) வளாகத்தின் மதிப்பை ₹. 40,000 உயர்த்தவேண்டும்
ii) சரக்கிருப்பு 3,000, இயந்திரம் ₹. 6,500 மதிப்பு குறைக்கவேண்டும்.
iii) கொடுபடாச் செலவுகள் ₹. 500 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.

குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து மறுமதிப்பீட்டுக்கணக்கு தயாரிக்கவும்.

46. கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:

(அ) ஈட்டிய இலாபங்கள் : 2016: ₹. 52,000; 2017: ₹. 44,000 மற்றும் 2018: ₹. 26,000.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹. 7,000 சேர்ந்துள்ளது.

(இ) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹. 4,000 குறைக்கப்பட்டது.

(ஈ) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால், எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹. 4,800 என மதிப்பிடப்பட்டது.

3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

( அல்லது )

அனில், சுனில் மற்றும் ஹரி என்ற மூன்று கூட்டாளிகள் 4:3:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தைப் பகிர்ந்து வந்தனர். அவர்கள் ராஜா என்பவரை 20% இலாபத்திற்கு கூட்டாளியாகச் சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாகவிகிதம் கணக்கிடவும்.

47. காஞ்சி பொழுதுபோக்கு மன்றத்தின் கீழ்க்காணும் தகவல்களிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கினைத் தயார் செய்யவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்க ரொக்க இருப்பு( 01.4.17 ) | 10,000 | அறைகலன் வாங்கியது | 15,000 |
| தொடக்க வங்கி இருப்பு ( 01.4.17 ) | 18,000 | பழைய டென்னிஸ் பந்துகள் விற்றது | 700 |
| விளையாட்டு உபகரணம் வாங்கியது | 36,000 | விளையாட்டு அரங்கத்திற்கு பெற்ற நன்கொடை | 12,000 |
| செய்தித்தாள் வாங்கியது | 800 | பயணச் செலவுகள் | 2,500 |
| பில்லியார்ட்ஸ் மேசை வாங்கியது | 25,000 | அறக்கொடை நாடகக்காட்சி செலவுகள் | 4,000 |
| புதிய டென்னீஸ் மைதானம் கட்டியது | 40,000 | அறக்கொடை நாடகக்காட்சி வரவுகள் | 4,300 |
| சேர்க்கை கட்டணம் பெற்றது | 2,000 | கேளிக்கை வரவுகள் | 19,000 |
| நகராட்சி வரி | 35,000 | இறுதி கைரொக்க இருப்பு | 10,000 |

( அல்லது )



பண்ருட்டி கிரிக்கெட் மன்றத்தின் 2019, மார்ச் 31 - ல் முடிவடையும் ஆண்டிற்கான பின்வரும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து, 2019 மார்ச் 31-ல் முடிவடையும் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவினக்கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்யவும்.

<u>பண்ருட்டி கிரிக்கெட் மன்றம்</u>

2019, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

ப வ

| பெறுதல்கள் | தொகை (₹) | செலுத்தல்கள் | தொகை (₹) |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | பராமரிப்புச் செலவுகள் | 5,000 |
| வங்கி ரொக்கம் | 8,000 | அறைகலன் | 15,000 |
| சந்தா | 11,000 | பல்வகைச் செலவுகள் | 1,400 |
| பழைய மட்டைகள் விற்றது | 100 | செயலாளார் மதிப்பூதியம் | 4,500 |
| தொடர் விளையாட்டுப் போட்டிக்கான சந்தா | 2,000 | மட்டைகள் மற்றும் பந்துகள் | 7,400 |
| உயில்கொடை | 20,000 | இருப்பு கீ/இ வங்கி ரொக்கம் | 7,800 |
| | **41,100** | | **41,100** |

## <u>கூடுதல் தகவல்கள்</u>

2015, ஏப்ரல்1 அன்று மன்றத்தில் பந்துகள் மற்றும் மட்டைகள் இருப்பு ₹. 3,000; முன்கூட்டிப் பெற்ற சந்தா ₹. 500. தொடர்விளையாட்டுப் போட்டியின் உபரித் தொகை நிரந்தர அரங்கத்திற்கான ஒதுக்காக உருவாக்கப்பட வேண்டும். 31.3.2016 அன்று பெறவேண்டிய சந்தா ₹. 2,000. 31.3.2016 - ல் மட்டைகள் மற்றும் பந்துகள் இருப்பு ₹. 1,000.